செ.வெ.எண் : 38/ ஆகஸ்ட் நாள் : 18.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## பொதுத்துறை காப்பீட்டு நிறுவனத்தில் உதவியாளர் பணியிடத்திற்கான போட்டித் தேர்வுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக இலவச பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் சார்பாக, நாட்டின் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தில் உதவியாளர் பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுக்கு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இலவச பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் அறிவிக்கை நாள் : 09.08.2017-இன்படி, இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் சார்பாக, நாட்டின் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தில் உதவியாளர் பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுக்கு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இலவச பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது. மேற்கண்ட பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள், இளங்கலை பட்டம் பெற்றவர்கள், தங்களுடைய பெயர் மற்றும் முகவரியினை இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 24.08.2017-க்குள் பதிவு செய்யலாம் எனவும், மேற்படி பதிவு செய்தவர்கள் 29.08.2017 முதல் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறும் பயிற்சியில் கலந்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு 99449 32477 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**